REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 21 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 88 இல. 302 | December 21, Monday, 2020 | 20பக்கங்கள் | 30/-

கொரோனா தொற்று;

## தொற்றாளர்கள் 36,929

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 929ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. நேற்றைய தினம் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் 262 பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 30 பேர்

06

வவுனிக்குளத்துக்குள் பாய்ந்த கப் வாகனம்;

## தந்தை, மகள், அயல்வீட்டு சிறுவன் சடலமாக மீட்பு

மற்றொரு சிறுவன் நீந்தி கரையேறினார்





**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் நேற்று முன்தினம் காணாமல் போன தந்தையும் மகளும் சடலமாக நேற்று சுழியோடிகளால் மீட்கப்பட்டுள்ளனர்.

வவுனிக்குளம் குளக்கட்டில் பயணம் செய்து கொண்டிருந்த கப் ரக வாகனம் ஒன்று நேற்று முன்தினம் மாலை குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியிருந்தது.

06

அச்சுறுத்தலில் லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை

## வைரஸ் தாக்கத்திற்கு தினமும் 5 சிறார்கள்

இதுவரை 70 சிறார்களுக்கு தொற்று உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு, லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஜீ. விஜேயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுவரை 70 சிறுவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தினமும் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் சிறுவர்களில்



ஐந்து பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் தற்செயலாக மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகளின் போது தினமும் ஐந்துக்கு குறையாத நபர்கள் வைரஸ் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வைத்தியசாலைக்கு தினந்தோறும் சிகிச்சைக்காக வருபவர்களிடம் பிசிஆர்

06

## கடற்றொழிலாளர் பிரச்சினை தீர அமைச்சுப் பதவியை தூக்கி வீ

முல்லைத்தீவில் நேற்று அமைச்சர் டக்ளஸ் முழக்கம்



கடற்றொழி ளுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாது போகுமிடத்து கடற்றொழில் அமைச்சுப் பதவியை தூக்கி எறியவும் தயங்க மாட்டேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய எல்லை தாண்டிய சட்ட விரோத செயற்பாடுகளுக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்ற நிலையில் நேற்று அங்கு சென்ற அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு

06






இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்வதை கண்டித்து பிரான்ஸ் நாட்டில் புகழ் பெற்ற சுதந்திர சதுக்கத்துக்கு அருகாமையில் இலங்கையர்கள் சிலர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## 2021 இல் பாடசாலைகள் ஆரம்பமாகலாம் திகதி குறித்து இவ்வாரம் அறிவிப்பு

சுகாதார தரப்பு பரிந்துரைகளுக்கு அமைய திறப்பு

2021ம் ஆண்டில் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளை தொடங்குவதற்கான திகதி குறித்து எதிர்வரும் வாரத்திற்குள் முடிவு எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய கொரோனா தொற்று நிலைமையை கருத்தில் கொண்டு சுகாதாரத் துறை தெரிவிக்கும்



பரிந்துரைகள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி பாடசாலைகள் திறக்கப்படும் என அவர் கூறியுள்ளார். அடுத்த ஆண்டு பாடசாலைகள் தொடங்குவது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க சுகாதார அமைச்சர் உடனான சிறப்பு சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

06

## முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமையை வழங்கவும்

மறுப்பது அடிப்படை உரிமை மறுப்பாகும்

முஸ்லிம்கள் தங்கள் மத கொள்கைகள் அடிப்படையில் உடல்களை அடக்குவதற்கு உள்ள உரிமையை மறுப்பது, அடிப்படை உரிமையை மறுக்கும் செயல் என தமிழ்தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு நேற்று முன்தினம் நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது.

கொவிட் 19 காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தொடர்பில் தாமதமின்றி இறுதி முடிவை எடுப்பது

06

## நீரால் கொரோனா தொற்று பரவாது

புதைப்பதால் பிரச்சினையில்லை



நீரால் கொரோனா வைரஸ் பரவாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கொவிட்19 நோயால் உயிரிழக்கின்றவர்களது உடல்களை புதைப்பதில் பாதிப்பு இல்லை என்று சமுதாய வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார். ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், ஊடகவியலாளர் ஒருவர் கொரோனாவில் மரணிக்கும் உடல்களை தகனம் செய்வது தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வரைபு விடயத்தை முழுமையாக விளங்கிக்கொள்ளாது

## விக்கியும் கஜேந்திரகுமாரும் பொய் கூறுவதாக சுமந்திரன் குற்றச்சாட்டு

## ஹெரோயினுடன் பிடிபட்டவரிடம் பெருந்தொகை பணம் மீட்பு



பெண் ஒருவர் உட்பட மூவர் கடுவெலவில் கைது

## கொரோனாவை ஒழிக்க சிறிது காலம் பிடிக்கும்

பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ண



நாட்டிலிருந்து கொரோனாவை இல்லாதொழிக்க சிறிது கலாம்